| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24

Total No. of Questions : 63 ] [ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T** **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 19. 06. 2012 ] [ Date : 19. 06. 2012

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 09-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ] [ Time : 09-30 A.M. to 12-45 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**FOR OFFICE USE ONLY**

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |
| | | | | | | | | ***Total Marks*** | |

| Total Marks in words | | | Grand Total | |
|---|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ | |
| 2. ✓ | | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* | |

[ Turn over

*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடைப் பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. அலகிலா விளையாட்டுடையவன் யார் ?

(A) கடவுள்

(B) கம்பர்

(C) ஏழை

(D) வீரன்.

*விடை :* ____________________

2. ஆழி என்பதன் பொருள் என்ன ?

(A) ஆழ்ந்த

(B) கடல்

(C) ஆறு

(D) குளம்.

*விடை :* ____________________

3. தமிழரசியின் செங்கோலாக விளங்குவது எது ?

(A) குண்டலகேசி

(B) மணிமேகலை

(C) வளையாபதி

(D) திருக்குறள்.

*விடை :* ____________________

4. வான் வழி வந்த நதி எது ?

(A) யமுனை

(B) சிந்து

(C) கங்கை

(D) கோதாவரி.

*விடை :* ____________________

5. ஆனந்தரங்கப் பிள்ளையைப் போற்றிப் பாராட்டிய புலவர் யார் ?

(A) பாரதியார்

(B) பாரதிதாசன்

(C) நாமக்கல் கவிஞர்

(D) சீனிவாசகவி.

*விடை :* ____________________

6. மணிமேகலையை இயற்றிய ஆசிரியர் யார் ?

(A) இளங்கோவடிகள்

(B) சீத்தலைச் சாத்தனார்

(C) கம்பர்

(D) திருவள்ளுவர்.

*விடை :* ____________________

7. கண்டதேவி என்னும் தலத்தின் புராணம் இயற்ற தேவகோட்டைக்குச் சென்றவர்

(A) மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(B) உ. வே. சாமிநாதர்

(C) நாமக்கல் கவிஞர்

(D) திருவள்ளுவர்.

*விடை :* ____________________

8. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

(A) ஜி. யு. போப்

(B) எம். அரியல்

(C) டால்ஸ்டாய்

(D) ஆல்பர்ட் சுவைட்டர்.

*விடை :* ________________

9. சமூக அக்கறை உள்ள பாடகர்கள் யார் ?

(A) கொம்பேகாரரு

(B) கொம்பே இராமரு

(C) லாவணி பாடகர்கள்

(D) கில்லேகியாதரு.

*விடை :* ________________

10. மனோன்மணிக்கு ஏற்ற மணாளன்

(A) சகடன்

(B) புருஷோத்தமன்

(C) நடராசன்

(D) பலதேவன்.

*விடை :* ________________

11. ஏவுகணையில் உள்ள தீயை அணைக்கப் பயன்படும் நீர்மம்

(A) ஆக்ஸிஜன்

(B) ஹைட்ரஜன்

(C) ஓசோன்

(D) நைட்ரஜன்.

*விடை :* ________________

12. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது எது ?

(A) இயற்கை

(B) செயற்கை

(C) மாடமாளிகை

(D) குடிசை.

*விடை :* ______________________

13. வெண்பாவின் ஓசை

(A) அகவல் ஓசை

(B) செப்பல் ஓசை

(C) துள்ளல் ஓசை

(D) தூங்கல் ஓசை.

*விடை :* ______________________

14. முதல் எழுத்து ஒன்றி வந்தால் அது என்ன தொடை ?

(A) எதுகை

(B) மோனை

(C) இயைபு

(D) முரண்.

*விடை :* ______________________

15. 'வெள்ளை அடித்தான்' இது என்ன ஆகுபெயர் ?

(A) சினை ஆகுபெயர்

(B) பண்பாகுபெயர்

(C) இடவாகுபெயர்

(D) காலவாகுபெயர்.

*விடை :* ______________________

கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. ஆனந்தரங்கப் பிள்ளை .................... என்ற கப்பல் வைத்திருந்தார்.

17. உலகியல் வாழ்விற்குப் .................... வேண்டும்.

18. வெற்றி உனக்கு முன் .................... எடுத்துப் போகிறது.

19. சாயக் கண்டது காய்குலைச் .................... .

20. 'கலங்கு' என்பது .................... அளபெடை.

21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | இறைவனை வாழ்த்தாதது | i) | மெய்ப்பொருள் நாயனார் |
| (b) | அரசனாக வேண்டுமெனில் | ii) | பாரதிதாசன் |
| (c) | செர்டகாப் | iii) | அகம் |
| (d) | தத்தா நமர் | iv) | கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை |
| (e) | பெண்ணுரிமை | v) | சுந்தரமுனிவர் |
| | | vi) | டால்ஸ்டாயின் நண்பர். |

*விடைகள் :*

a) ____________________

b) ____________________

c) ____________________

d) ____________________

e) ____________________

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : $10 \times 1 = 10$

22. 'என் கைவேலைத் திறன்' என்று டால்ஸ்டாய் எதனைக் குறிப்பிட்டார் ?

23. முதியவராக வந்து தீர்ப்பு வழங்கியவர் யார் ?

24. உலகில் இருக்கும் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும் ?

25. கால்நடைகள் நீரருந்த திம்மக்கா என்ன செய்தார் ?

26. பெரிய இடமே சேருவது எது ?

27. யாரிடம் சேரும் செல்வம் இனிது ?

28. ஏன் செல்லமழை பெய்ய வேண்டும் ?

29. வியங்கோள் வினைமுற்றுக்கு ஒரு சான்று தருக.

30. கர்நாடகத்தில் வீர சைவத்திற்குப் புத்துயிர் அளித்தவர் யார் ?

31. அணி என்றால் என்ன ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : $15 \times 2 = 30$

32. குணங்குடி மஸ்தான் அவர்கள் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

33. எந்த நாடு நாடல்ல எனப்படும் ?

34. எது நாய் பெற்ற தெங்கம் பழம் போன்றது ?

35. சோழனின் போர் யானை நாணிப் புறங்கடை நிற்கக் காரணம் என்ன ?

36. ஔவையார் எதனை நல்ல நிலமெனக் குறிப்பிடுகிறார் ?

37. இளைஞனின் பெருவலிமையைக் கவிஞர் சிற்பி எவ்வாறு உரைக்கிறார் ?

38. ஆனந்தரங்கம் பிள்ளை அன்புள்ளம் கொண்டவர் என்பதற்குச் சான்று தருக.

39. உடல் நலம் காத்தல் பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

40. நாட்டுப்புறக் கலைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம் ?

41. திம்மக்காவின் தொண்டு எவ்வாறு சிறப்பிக்கப்பட்டது ?

42. விடுதி மேலாளர் சாந்தாபார்பராவில் நிலையாகத் தங்கக் காரணம் என்ன ?

43. இடைச்சொல் என்றால் என்ன ?

44. உடம்படுமெய் என்றால் என்ன ?

45. சுந்தரம்பிள்ளை அவர்களின் எல்லையற்ற தமிழ்ப் பற்றினைப் புலப்படுத்துக.

46. அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ந்து கூறியது யாது ?

*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''உருவு கண்டு எள்ளாமை வேண்டும்''

48. ''கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்''

49. ''எங்களில் ஒருவருக்குக் கூடச் சொந்தமாக வீடு இல்லை''

50. ''நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை''

51. ''பிள்ளைகள் வளர்ந்து பொருளீட்டித் தருவதைப் போல''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக :
$5 \times 3 = 15$

52. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

53. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

54. ''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''

*அல்லது*

''தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்''

இவற்றுள் ஒரு பழமொழியை விளக்கி எழுதுக.

55. பூங்குன்றன், இளநாகன் இவர்களின் வழக்கு யாது ?

56. அமைதிப்புறாவின் ஆசைகளாக வைரமுத்து கூறுவன யாவை ?

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ''உலகம் யாவையும்'' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

*அல்லது*

''நாடா கொன்றோ'' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : $3 \times 4 = 12$

58. மழையின் சிறப்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை ?

*அல்லது*

பாரத நாட்டின் சிறப்புகளாக திரு.வி.க. கூறியுள்ளவற்றை விவரி.

59. டொல்லு ஆட்டம் குறித்த செய்திகளைத் தொகுத்து கூறுக.

*அல்லது*

அமெரிக்க நாட்டின் அறிவியல் முன்னேற்றத்தைத் தக்க சான்றுகள் காட்டி விளக்குக.

60. மனோன்மணீயத்தின் சிறப்புகள் யாவை ?

*அல்லது*

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பெருமைகளாக அந்தணர் கூறியன யாவை ?

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : $4 \times 1 = 4$

மக்களுக்கும், மாக்களுக்கும் உள்ள வேறுபாடுகளுள் ஒன்று பழமையைப் பற்றி அறிவதே ஆகும்; மக்களால் அறிய இயலும்; மாக்களால் அறிய இயலாது. மக்களுக்குப் பயன்படுகின்றனவற்றுள் முதன்மையானது மொழி ஆகும். தம் எண்ணத்தையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்குத் துணையாய் இருப்பது மொழி. தமிழ் மொழி இனிமையானது. தொன்மையானது. வளமானது. கற்பதற்கு எளிமையானது. இவற்றையெல்லாம் தமிழர்களே அறியார். தமிழ் இந்திய மொழிகளின் தாய். ஏன் உலக மொழிகளின் தாய். இந்த உண்மையைத் தமிழர்களே அறிந்திலர். தமிழ் நாட்டளவிலும் எல்லாத் துறைகளிலும் பயன்படு கருவியாய் அஃது அமைந்திலது. அமைவதற்குரிய முயற்சியில் தமிழர்கள் ஈடுபடல் வேண்டும். தமிழ் மீண்டும் மலர்ச்சி பெறுவதற்குரிய வழி இதுதான்.

*வினாக்கள் :*

1. மக்களுக்கும், மாக்களுக்கும் உள்ள வேறுபாடு யாது ?
2. மொழி எதற்குத் துணையாக இருக்கிறது ?
3. தமிழ் மொழி எத்தகையது ?
4. மீண்டும் தமிழ் மலர்ச்சி பெறும் வழி யாது ?

*விடைகள் :*

1. 

2. 

3. 

4. 

62. உன் தெருவில் தேங்கி இருக்கும் கழிவுநீரை அகற்றக் கோரி மாநகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் வரைக.

*அல்லது*

நீ சென்று வந்த சுற்றுலா குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக. $1 \times 5 = 5$

63. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : $1 \times 5 = 5$

i) கணினியும் அதன் பயன்பாடுகளும்

ii) நான் விரும்பும் புலவர்

iii) பொங்கல் விழா.